கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:07.12.2023

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளை மேம்படுத்த உதவும் வேளாண் மின்னணுவளக் கூட்டமைப்பைப் (CeRA) பற்றிய கருத்தரங்கம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளை மேம்படுத்த உதவும் வேளாண் மின்னணுவளக் கூட்டமைப்பைப் (CeRA) பற்றிய கருத்தரங்கம் 05.12.2023 அன்று நடைபெற்றது.

கருத்தரங்கை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் துவக்கிவைத்து தலைமைதாங்கினார் மற்றும் அவரது உரையில் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக்கட்டுரைகளை தரமான இதழ்களில் வெளியிடுவதில் தொடர் முயற்ச்சி மேற்கொள்ளப்படுவதை விளக்கினார். இந்த மின்னணுவளத்தை சரியானபடியும் அதிகப்படியாகவும் உபயோகப்படுத்திய கல்வி நிறுவனங்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவப்படுத்தினார்.

பல்கலைக்கழக மாணவர் நலமையத்தின் முதன்மையர் நா. மரகதம் அவர்கள் இப்பல்கலைக்கழக நூலகத்தின் பழமையையும் அதன் மின் மற்றும் அச்சிடப்பட்ட புத்தக வளங்கள் பற்றியும் விவரித்தார். பெங்களூரிலுள்ள இன்பர்மேட்டிக்ஸ் கம்பெனியின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. தேவேந்திரதாகூர், இக்கருத்தரங்கைப் பற்றிய குறிப்பையும் விவசாய மின்னணுவளக் கூட்டமைப்பின் பிரிதிநிதி முனைவர் ஹச்.கே. திரிபாதி, தென்னிந்தியாவில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் பயன்பாடு, தரவரிசை மற்றும் அதன் உபயோகத்தை அதிகரிப்பது பற்றியும் விளக்கவுரையாற்றினார். முனைவர் கு.ம.செல்லமுத்து பேராசிரியர், மாணவர் நலமையம் நன்றியுரையாற்றினார்.

இக்கருத்தரங்கின் தொழில் நுட்ப அமர்வில் இந்த வேளாண் மின்வளக் கூட்டமைப்பின் புதிய அம்சங்களையும், பயனர்களின் மாதிரி செயல்பாடுகள், கல்வி நிறுவன வளங்களின் பகிர்வு, பகுப்பாய்வு மற்றும் நேரடிப் பயிற்சிகளை அதன் உரிமையாளர்களாக எப்படிப்

பயன்படுத்துவது போன்ற விரிவான செய்திகளைப் பற்றிய தெளிவு கொடுக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் பயனாளர்கள், ஐந்து மாநிலங்கள் (தமிழ்நாடு, கேரளா, ஆந்திர, தெலுங்கானா, கர்நாடகா) மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்திலிருந்து (அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள்) வந்து கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**